சார்பு நீதிமன்றம், பண்ருட்டி
முன்னிலை: திருமதி. அனிதா ஆனந்த், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
O.S. No.9/2017

வா.சா. 1 நாள் : 22.07.2026

| | | |
|---|---|---|
| பெயர் | : | வசந்தா |
| வயது | : | 69 |
| கணவர் பெயர் | : | வைகுண்ட வாசகர் |
| முகவரி | : | ரைஸ்மில் தெரு, திரு நகர், கில்லை அஞ்சல், சிதம்பரம் வட்டம், |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 22nd day of July 2026

**3, 4 ஆம் பிரதிவாதி தரப்பில் வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. என் தந்தை மற்றும் தாய் சொத்துக்களில் எனக்கு பாகம் வேண்டும். எனது சித்தப்பா மற்றும் தந்தைக்கு பொது குடும்ப சொத்துக்கள் உள்ளதா என்றால் அவர்களுக்குள் சொத்து பிரித்தாகிவிட்டது. எனக்கு 1985 ல் திருமணம் ஆனது. அப்போது பிருந்தாவதி, கௌரி, பிராமா ஆகியோருக்கும் திருமணம் ஆகிவிட்டது. இந்த சொத்துக்களில் எனக்கு வருமானத்தில் பங்கு கொடுக்கப்பட்டு தான் வருகிறது. கூட்டு குடும்பமாக அனுவித்து தான் வருகிறோம். நான் வருமானம் பெற்றதற்கான ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் வழக்கில் எங்கள் பங்காக 6ல் 4 பாகமாக கேட்டிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல.

2. எனது தந்தை மற்றும் தாயின் சொத்துக்கள் ஏற்கனவே விற்கப்பட்டு விட்டது என்று சொன்னால் விற்கும் போது எங்களுக்கு தெரியாமல் விற்றுவிட்டார்கள். எனது தாத்தா உயில் மூலம் 1 ஏக்கர் 10 செண்ட் நிலத்தை எனது அம்மாவிற்கு கொடுத்திருந்தார். அது முழுவதும் விற்கப்பட்டு விட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாமலே என் அம்மா அண்ணன்களுடன் சேர்ந்து விற்றிருக்கிறார். சொத்துக்களின் மதிப்பு எனக்கு தெரியுமா என்றால் நான் படிக்கவில்லை எனக்கு தெரியாது. பிராதின் விவரங்களை நாங்கள் தான் வழக்கறிஞருக்கு கூறினோம். அதில் போடப்பட்டுள்ள மதிப்பு யாரை கேட்டு போடப்பட்டது என்றால் நாங்களேதான் சொன்னோம். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 1 ஏக்கர் 25 லட்சம் ரூபாய் மதிப்பு இருக்கும். வழக்கு சொத்தின் மதிப்பை குறைத்து முன்சீப் நீதிமன்றத்தில் முதலில் வழக்கு தாக்கல் செய்தோம் என்றாலும் பிறகு சொத்து மதிப்பை உயர்த்தி இந்த

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், சொத்தின் மதிப்பு அதிகம் என்பதால் கடலூர் மாவட்ட நீதிமன்றத்தில் நடத்தப்பட வேண்டும் என்றாலும் இந்த நீதிமன்றத்தில் ஆள் வரம்பிற்கு இந்த வழக்கு உட்பட்டது என்றாலும் எனக்கு தெரியவில்லை.

3. வழக்கு போடுவதற்கு சுமார் 4 வருடங்களுக்கு முன்பு எங்களுடைய பாகத்தை சகோதரர்களிடம் கேட்டோம். எங்கள் அம்மா உயிருடன் இருக்கும் போது நாங்கள் சொத்தில் பாகம் கேட்டோமா என்றால் இல்லை. 1990 க்கும் முன்பே எங்களுக்கு திருமணம் ஆகிவிட்டதால் நாங்கள் சொத்தில் பங்கு கேட்க முடியாது என்றால் சரியல்ல. 2005 ற்கு முன்பே விற்கப்பட்ட சொத்துக்களில் எங்களுக்கு பாகம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிடைகிறது.

சாட்சியின் கையொப்பம்

Taken down before me in open court and read over and explained. Understood and acknowledged by the witness to be correct.

ANITHA ANAND Digitally signed by ANITHA ANAND

Sub Judge, Panruti